பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**05 06 2026** **FRIDAY** **7.15 AM**

ஆகாஷ்வாணி

## தலைப்புச் செய்திகள்

**1.** இந்தியா - வெனிசூலா இடையேயான நட்புறவு மேலும் வலுவடையும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**2.** மாநிலங்களவை உறுப்பினர்களுக்கான தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பட்டியலை பிஜேபி மற்றும் காங்கிரஸ் கட்சிகள் வெளியிட்டுள்ளன.

**3.** நேபாள் வெளியுறவு அமைச்சர் திரு **Shisir Khanal,** மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

**4.** இந்தியா — ரஷ்யா இடையேயான நட்புறவுக்கு களங்கம் விளைவிக்கும் முயற்சிகள் ஒருபோதும் வெற்றியடையாது என்று ரஷ்ய அதிபர் திரு விளாடிமீர் புட்டின் தெரிவித்துள்ளார்.

**5.** **18** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை ஹாக்கிப் போட்டியின் ஆடவர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

இந்தியா - வெனிசூலா இடையே எரிசக்தி, அரியவகை கனிமங்கள், தொழில்நுட்பம், விவசாயம், சுகாதாரம், மக்கள் தொடர்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து அந்நாட்டு அதிபருடன் விரிவாக விவாதிக்கப்பட்டதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், லத்தீன் அமெரிக்காவில் இந்தியாவின் நட்பு நாடாகத் திகழும் அந்நாட்டுடன், பரஸ்பரம் இருதரப்பிற்கும் பயனளிக்கும் நடவடிக்கைகளை இணைந்து மேற்கொள்வது என முடிவு செய்யப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத் துறை செயலாளர் திரு ருத்ரேந்திரா டாண்டன், உலகில் அதிக எண்ணெய் வளம் கொண்ட நாடாக வெனிசூலா திகழ்கிறது என்றும், எரிசக்தித் துறையில் அந்நாட்டுடனான ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியா விரும்புவதாகவும் கூறினார்.

இதுதவிர, கால்நடை வளர்ப்பு, போக்குவரத்து, வேளாண் உபகரணங்கள், வாகன உற்பத்தி மற்றும் மருத்து உற்பத்தி போன்ற துறைகளில், இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் குறித்தும், விவாதிக்கப்பட்டதாக திரு டாண்டன் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

இந்தியா - பிரிட்டன் இடையே பரஸ்பரம் பயனளிக்கக்கூடிய பல்வேறு துறைகளில் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவிட்டுள்ள அவர், இந்தியா வந்துள்ள அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சருடனான பேச்சுவார்த்தைகள் ஆக்கபூர்வமாக இருந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த சந்திப்பின்போது, பொருளாதார வளர்ச்சி, தொழில்நுட்பம், புதுமைக் கண்டுபிடிப்புகள், பாதுகாப்பு, பருவநிலை மாற்றம், தூய்மை எரிசக்தி, கல்வி போன்ற துறைகளில், இரு நாடுகளும் இணைந்து செயல்படுவது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

வரலாறு மற்றும் கலாச்சார ரீதியில் இரு நாடுகளுக்கும் இடையே வலுவான நட்புறவு இருந்து வருவதாகவும்\, உயர் தொழில்நுட்பம், பொருளாதார நடவடிக்கைகளில், இருதரப்பு உறவுகளை மேலும் வலுவடையச் செய்வதற்கான முன்முயற்சிகள் குறித்தும் ஆலோசனை நடத்தியதாக திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

இதனிடையே, பெங்களுருவில், லிவர்பூல் பல்கலைக்கழக கிளையை அமைப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது, தேசிய

கல்விக் கொள்கை அமலாக்கத்தின் குறிப்பிடத்தக்க நடவடிக்கை என்று மத்திய கல்வியமைச்சர் திரு தர்மேந்திரா பிரதான் கூறியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், கற்றல், புதுமைக் கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சி ஆகியவற்றில், உலகின் மையமாக இந்தியா உருவெடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

உலகளவில் முன்னணியில் உள்ள பல்கலைக்கழகங்கள், இந்தியாவில் அதன் கிளைகளை அமைத்து வருவதன் மூலம், இளைஞர்களுக்கு சிறந்த கல்விக்கான வாய்ப்புக்கள் அதிகரிப்பதுடன், கல்வித் துறையில் இந்தியா - பிரிட்டன் இடையேயான ஒத்துழைப்பு மேலும் வலுவடையும் என்று திரு தர்மேந்திரா பிரதான தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

எரிசக்தித துறையில் இந்தியா - வெனிசூலா இடையே நீண்டகால உறவுகள் இருந்து வருவதாக மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு ஹாதீப் சிங் பூரி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தைப் பதிவிட்டுள்ள அவர், அதிக அளவிலான எண்ணெய் வளம் கொண்ட நாடாக உள்ள வெனிசூலாவில், கச்சா எண்ணையை சுத்திகரிக்கும் பணிகளில், இந்திய நிறுவனங்களின்

தொழிநுட்ப நிபுணத்துவம், மனித வளம் ஆகிய துறைகளில் முக்கிய பங்களிப்பை வழங்க முடியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஏப்ரல், மே மாதங்களில், இந்தியாவிற்கு அதிகளவில் கச்சா எண்ணையை பெருமளவில் விநியோகம் செய்த நாடாக வினிசூலா திகழ்வதாகவும், எதிர்காலத்தில் எரிசக்தித் துறையில், இரு நாடுகளுக்கும் இடையேயான வாய்ப்புக்களை இது எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

கச்சா எண்ணெய் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் குறித்து ஆய்வு செய்வதற்காக இந்திய தொழில்நுட்ப வல்லுநர் குழு விரைவில் அந்நாட்டிற்கு செல்லவுள்ளதாக திரு ஹர்தீப் சிங் பூரி தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

நேபாள் வெளியுறவு அமைச்சர் திரு **Shisir Khanal,** மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

இதுதொடர்பாக, வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், அவரது இந்த பயணத்தின்போது வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்த உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இவ்விரு நாடுகளுக்கும் இடையே வர்த்தகம், போக்குவரத்து, எரிசக்தி, முதலீடு உள்ளிட்ட துறைகளில் பரஸ்பரம் நலன் சார்ந்த பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்படும் என்று நேபாள அரசு தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

மாநிலங்களவை உறுப்பினர்களுக்கான தேர்தல் மற்றும் இடைத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பட்டியலை பிஜேபி மற்றும் காங்கிரஸ் கட்சிகள் வெளியிட்டுள்ளன.

பிஜேபி சார்பில் 11 வேட்பாளர்கள் கொண்ட பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இதனிடையே, இத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பட்டியலை காங்கிரஸ் வெளியிட்டுள்ளது.

தமிழகத்திலிருந்து மாநிலங்களவைக்கு அக்கட்சி சார்பில் திரு பிரவீன் சக்ரவர்த்தி போட்டியிட உள்ளதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

மாநிலங்களவைக்கு காலியாக உள்ள 24 இடங்களுக்கு இம்மாதம் 18-ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ளது.

<<<<<>>>>>

இந்தியா — ரஷ்யா இடையேயான நட்புறவுக்கு களங்கம் விளைவிக்கும் முயற்சிகள் ஒருபோதும் வெற்றியடையாது என்று ரஷ்ய அதிபர் திரு விளாடிமீர் புட்டின் தெரிவித்துள்ளார்.

சர்வதேச செய்தி நிறுவனத்துக்கு அவர் அளித்த பேட்டியில், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மற்றும் அந்நாட்டின் வெளியுறவுக் கொள்கை சுதந்திரமானது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவுடனான பொருளாதார வாய்ப்புகளை விரிவுபடுத்தும் நடவடிக்கைகளுக்கு ரஷ்யா உயர் முன்னுரிமை அளித்து வருவதாக திரு விளாடிமீர் புட்டின் தெரிவித்தார்.

<<<<<>>>>>

விமான நிறுவனங்களுக்கு வலுவான நிதி கட்டமைப்பு, விமான பயணிகளுக்கு குறைந்த செலவில் பயணம் ஆகியவற்றை உறுதி செய்யும் வகையில், விமான எரிபொருள் நிலைப்படுத்தும் திட்டத்தின்கீழ், புதிய விலையை மத்திய அரசு நிர்ணயித்துள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் நிலவிவரும் பதற்றமான சூழல் காரணமாக, சர்வதேச அளவில் எரிபொருளுக்கான விலை அதிகரித்துவரும் நிலையில், உள்நாட்டு விமான நிறுவனங்களுக்கு

எரிபொருள் விலையை லிட்டர் ஒன்றுக்கு **86** ரூபாய் **32** காசுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய விலை அடுத்த மூன்றாண்டுகளுக்கு எவ்வித மாற்றமும் இன்றி இருக்கும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

பயணக் கட்டணம் மற்றும் விமான நிலைய கட்டணங்களை சீராக பராமரிப்பதற்கு இத்திட்டம் உதவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த விலை நிர்ணயத்தின்படி, எண்ணெய் நிறுவனங்களுக்கான ஈவுத்தொகை, வரிகள் உட்பட விமான எரிபொருளின் விலை லிட்டர் ஒன்றுக்கு தில்லியில் **115** ரூபாயாகவும், மும்பையில் **114** ரூபாய் **50** காசுகளாகவும், சென்னையில் **139** ரூபாயாகவும் இருக்கும் என்று மத்திய விமான போக்குவரத்து அமைச்சகத்தின் இயக்குநர் திரு ரோஹித் ராஜ் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

உலக சுற்றுச்சூழல் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் வகையில், ஆண்டுதோறும் ஜூன் ஐந்தாம் தேதி இந்த தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இத்தினத்தையொட்டி, நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

புவியை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், 1973-ஆம் ஆண்டு இந்நாளை உலக சுற்றுச்சூழல் தினமாக கடைபிடிக்க ஐ நா முடிவு செய்தது.

<<<<<>>>>>

பீகார் மாநிலம்  முசாபர்பூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில், உயிரிழந்தோரின் எண்ணிக்கை ஐந்தாக உயர்ந்துள்ளது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் உடல்கள் உடற்கூறு ஆய்வு செய்யப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக அம்மாவட்ட ஆட்சியர் திரு சுப்ரத் குமார் சென் தெரிவித்துள்ளார்.

அம்மாநில முதலமைச்சரின் அறிவுறுத்தலின் பேரில், உயிரிழந்தோரின் குடும்பங்களுக்குத் தலா நான்கு லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்த ஐந்து உறுப்பினர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் தெரிவித்தார்.

இதனிடையே, இந்த தீ விபத்திற்கு மின் கசிவே காரணம் என்று முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதாக, அம்மாவட்ட மொத்த காவல்துறை கண்காணிப்பாளர் திரு கந்தேஷ் மிஸ்ரா தெரிவித்துள்ளார்.

எனினும், இந்த விபத்துக்கான காரணம் குறித்த முழுமையான விசாரணை நடைபெற்று வருவதாக அவர் கூறினார்.

இந்நிலையில், இந்த விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு அம்மாநில முதலமைச்சர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்

<<<<<>>>>>

**18** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை ஹாக்கிப் போட்டியின் ஆடவர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா — பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

ஜப்பானில் நடைபெறும் இப்போட்டி, இந்திய நேரப்படி பிற்பகல் மூன்றரை மணிக்கு தொடங்குகிறது.

மகளிர் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா — சீனாவை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இந்திய நேரப்படி இன்று காலை ஒன்பதரை மணிக்கு தொடங்குகிறது.

----------------

**Ulaanbaatar** ஒப்பன் மல்யுத்த சாம்பியன் போட்டியில், இந்தியா இரண்டு தங்கப் பதக்கம் வென்றுள்ளது.

**ஆடவர் 87 கிலோ எடைப்பிரிவு இறுதியாட்டத்தில், இந்தியாவின் சுனில் குமார் 4-3 என்ற புள்ளிக்கணக்கில், கிர்கிஸ்தானின் Azat Salidinov -வை வென்று இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.**

**97 கிலோ எடைப்பிரிவில், இந்தியாவின் நிதிஷ் குமார், 13-9 என்ற புள்ளிக்கணக்கில், கஜகஸ்த்தானின் Nurassyl Amanaly-ஐ வென்றார்.**

**<<<<<END>>>>>**